பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**24 02 2026 TUESDAY 6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

**1)** தமிழகத்தில் முத்ரா திட்டத்தின்கீழ், **3** லட்சத்து **60** ஆயிரம் கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

**2)** சணலுக்கு **2026-27**-ஆம் ஆண்டுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசு அறிவித்துள்ளது.

**3)** திருப்பூர் அரசு தலைமை மருத்துவமனையில், **90** கோடி ரூபாய் மதிப்பில் புற்றுநோய் சிகிச்சை மையம் இன்று தொடங்கப்பட்டது.

**4)** தமிழகத்தில் விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோருக்கு ஆன்லைன் மூலம் வாராந்திர ஆலோசனை வழங்கும் திட்டத்தை மாநில சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவனம் தொடங்கியுள்ளது.

**5)** ஜெர்மன் ஓபன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் அஷ்வினி பட் — **Shika Gautam** இணை — தைவான் இணையை எதிர்கொள்கிறது

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் முத்ரா திட்டத்தின்கீழ், 3 லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் உள்ள மத்திய மக்கள் தொடர்பக வளாகத்தில் நடைபெற்ற மத்திய அரசின் நலத்திட்டங்கள் வழங்கும் சேவை முகாமில் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு மக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி உள்ளதாகவும் கூறினார்.

***(Sound Byte — எல். முருகன் — 30 Sec. )***

தமிழக மக்கள் மேம்பாட்டிற்கும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் டாக்டர் எல். முருகன் கூறினார்.

***(Sound Byte — எல். முருகன் — 30 Sec. )***

வரும் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் தமிழகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள ரயில்வே மற்றும் விமான போக்குவரத்து கட்டமைப்புத் திட்டங்களையும் டாக்டர் எல். முருகன் பட்டியலிட்டார்.

***(Sound Byte — எல். முருகன் — 40 Sec. )***

<<<<<<<>>>>>>

சணலுக்கு 2026-27-ஆம் ஆண்டுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசு அறிவித்துள்ளது.

புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் கூட்டத்தில், TD-3 தரத்திலான சணலுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு 5 ஆயிரத்து தொள்ளாயிரத்து 25 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டை காட்டிலும் 275 ரூபாய் கூடுதலாகும்.

இந்திய அளவில் சராசரியாக உற்பத்திச் செலவு போக 61 புள்ளி எட்டு சதவீத வருவாய் விவசாயிகளுக்கு கிடைக்க வழிவகுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய சணல் வாரியம் குறைந்தபட்ச ஆதரவு விலையை கண்காணித்து உறுதி செய்யும் என்றும் மத்திய அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோரின் வருமானத்தை பெருக்குவதற்காக மாநில சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்

நிறுவனங்கள் சார்பில், ஆன்லைன் மூலமாக ஆலோசனை வழங்கும் நிகழ்ச்சி தொடங்கப்பட்டுள்ளது.

வாரந்தோறும் ஆலோசனை என்ற பெயரில் தொடங்கப்பட்டுள்ள இந்நிகழ்ச்சி, ஒவ்வொரு வாரமும் புதன்கிழமைகளில் காலை **11** மணிமுதல், நண்பகல் பணிரெண்டரை மணிவரை இடம்பெறுகிறது.

இதற்கான இணையதளத்தை அணுகுவதற்கான முகவரி **meet.google.com/ozx.figv.ghb**

வேளாண் விளைப்பொருட்கள் மற்றும் அவை சார்ந்த மதிப்புக்கூட்டப்பட்ட தயாரிப்புகளை மேம்படுத்துவது, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்திற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துவது உள்ளிட்ட நோக்கத்துடன் இதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர் தங்கள் சந்தேகங்களுக்கு நேரடியாக தொழில்நுட்ப வல்லுநர்களிடம் இருந்தும், அரசு நிறுவனங்களின் நுகர்வோர்களிடம் இருந்தும் ஆன்லைன் நிகழ்ச்சி மூலம் விளக்கங்களை பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவுப்பதப்படுத்துதல் துறை மூலமாக, அரிசி, தானியங்கள், பழங்கள், காய்கறிகள் உள்ளிட்ட விளைப்பொருட்களுக்கு மதிப்புக்கூட்டும் முறைகள், பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள், சிறு

மற்றும் நடுத்தர அளவிலான இயந்திரங்களை பயன்படுத்துதல், தயாரிப்பு மேம்பாடு, பாக்கேஜிங் போன்றவற்றில் ஆலோசனைகளை வாரந்தோறும் வர்த்தக ஆலோசனை மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

<<<<<<<>>>>>>>

கன்னியாகுமரி மாவட்டம் பெருமாள்புரத்தில் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய 90 வீடுகளை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

புதிதாக கட்டப்பட்டுள்ள இந்த வீடுகள் தரமாக உள்ளதாக பயனாளிகள் தெரிவித்தனர்.

நியாயவிலைக்கடை, சமுதாய நலக்கூடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்துதருமாறும் அவர்கள் கோரிக்கை வைத்தனர்.

<<<<<<<>>>>>>>

சென்னை சேப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில், 16 கோடி ரூபாய் மதிப்பிலான மூன்று திட்டப்பணிகளை துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

இறகுபந்து உள் விளையாட்டு அரங்கம் மற்றும் இரண்டு திருமண மண்டபங்களையும் அவர் திறந்துவைத்தார்.

ஆதிகேசவலு தெருவில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல்லையும் திரு உதயநிதி ஸ்டாலின் நாட்டினார்.

<<<<<<<>>>>>>

திருப்பூர் அரசு தலைமை மருத்துவமனையில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ், 90 கோடி ரூபாய் மதிப்பில் புற்றுநோய் சிகிச்சை மையம் இன்று தொடங்கப்பட்டுள்ளது.

மாநில அமைச்சர் திரு சாமிநாதன், இந்த மையத்தை மக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கிவைத்து பேசுகையில், புற்றுநோயாளிகளுக்கு ஒரே இடத்தில் முழுமையான சிகிச்சை வழங்கும் நோக்கில் இந்த மையம் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கதிர்வீச்சு சிகிச்சை, புற்றுநோயியல் சிகிச்சை, மேம்பட்ட ஸ்கேன் மற்றும் ஆய்வக வசதிகள் இந்த மையத்தில் உள்ளதாக அவர் கூறினார்.

திருப்பூர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த மக்கள் புற்றுநோய் சிகிச்சைக்காக சென்னை போன்ற பெரிய நகரங்களுக்கு இனி செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு எதிராக தவறான கருத்துகளை காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி கூறிவருவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மூத்த தலைவர் திருமதி **Bansuri Swaraj,** எதிர்மறையான மற்றும் வெறுப்புணர்வை தூண்டும் வகையில் திரு ராகுல்காந்தி பேசி வருவதாக கூறினார்.

எதிர்கட்சித் தலைவர் என்ற முறையில் ஜனநாயக ரீதியாக ஆக்கப்பூர்வமான கருத்துகளை தெரிவிப்பதை தவிர்த்து, வெறுப்புணர்வை தூண்டும் வகையில் அவர் பேசுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டின்போது, காங்கிரஸ் தொண்டர்கள் நடந்துகொண்ட விதம் ஏற்புடையது அல்ல என்றும், தன்னல சிந்தனையோடு அவர்கள் செயல்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எந்தவொரு கருத்தோ, கொள்கைகளோ இல்லாமல் காங்கிரஸ் கட்சியினர் செயல்பட்டு வருவதாகவம் திருமதி **Bansuri Swaraj** கூறினார்.

<<<<<<<>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம், வரதராஜன்பேட்டை, ஆண்டிமடம் உள்ளிட்ட பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை மாநில அமைச்சர் திரு சிவசங்கர் இன்று திறந்துவைத்தார்.

-----------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே திருநாவலூரில் ஐந்து கோடியே 16 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்ட ஒழுங்குமுறை விற்பனை கூடத்தை மாநில அமைச்சர் திரு எ வ வேலு இன்று திறந்துவைத்தார்.

--------------

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியராக திருமதி. மாலதி ஹெலனும், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியராக திருமதி. சினேகாவும் இன்று பொறுப்பேற்றுக்கொண்டனர்.

-------------

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை

**நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி. துர்கா மூர்த்தி தெரிவித்துள்ளார்.**

**------------------**

**தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலையத்தில் மாவட்ட அளவிலான விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோருக்கு சிறுதானியங்கள் மதிப்புக்கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்த சிறுதானிய கண்காட்சி இன்று நடைபெற்றது.**

**-----------------**

**தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் ஈரநிலம் பாதுகாப்பு கருத்தரங்கம் இன்று நடைபெற்றது.**

<<<<<<<>>>>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

**ஜெர்மன் ஓபன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் அஷ்வினி பட் — Shika கௌதம் இணை — தைவானின் Yin Hui Hsu — Jhih Yun Lin இணையை எதிர்கொள்கிறது.**

**இப்போட்டி இன்றிரவு மணி 11.30-க்கு தொடங்குகிறது.**

---------------

பிரிஸ்பேர்னில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், ஆஸ்திரேலியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது

**<<<<<<<END>>>>>>>**